
# தரிசன பூமி



"நாமோ
நீதி குடிகொள்ளும்
புதிய வானமும்
புதிய வையமும்
அவர் வாக்களித்தபடியே
வருமென்று
காத்திருக்கிறோம்."

—2இரா. 3,13

மலர் 1 இதழ் 2

01 ஒக்ரோபர் 1995

யாழ். மறைமாவட்ட நீதி, சமாதான ஆணைக்குழு வெளியீடு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆண்டவரே.

மரணத்துக்குள் வாழும் மக்களாக நாங்கள் இருக்கிறோம்
நாள்தோறும் போரின் தீவிரம் எம்மீது ஏற்றும்
சுமைகளைத் தாங்கமுடியாது உள்ளமும் உடலும்
கூனுண்டவர்களாக நிற்கின்றோம்.
நாங்கள் காட்டிவந்த ஏற்றத்தாழ்வுகள்...
நாங்கள் கடைப்பிடித்த பாரபட்சங்கள்...
நாங்கள் வளர்த்துவந்த கட்சிமனப்பான்மை
சுயமுனைப்பு எல்லாம்... எல்லாம்...
எம் தலைகளிலே விடிய...
விதைத்ததை அறுப்பவர்களாக,
தன்கையாலும் கண் குத்துண்டவர்களாக,
நொந்துபோன மனிதர்களாக நிற்கின்றோம்.
உமக்காக வறுமையுற்றவர்களாக நீரொன்றே
வலிமை என்று உணர்ந்தவர்களாக நிற்கின்றோம்.
எமது கஷ்டம் பாரும்.
எமது கடின இதயம் மாற்றும்.
இன, மத, மொழி வேறுபாடின்றி 'மனிதத்தை'
நோக்கும் நல்ல இதயத்தைத் தாரும்.
இந்தப் பயங்கரப்போர் தரும் ஆன்மீகப்பாடங்களை
நாங்கள் கற்கவும்,
கூடுமானால் இத்துன்பக்கலம் எம்மைவிட்டு அகலவும்,
ஆனால் உமது விருப்பும் உமது நீதியுமே
எங்கும் செழிக்கவும் வேண்டுமெனப்
பிராத்திக்கின்றோம்.
ஆமென்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# " இரத்தக் குரல் "

அதோ அந்தப் பெண்ணைப் பாருங்கள், அவள் இதயம் சுமந்திருக்கும் சோகம் உங்கள் உணர்வுகளுக்குப் புரிகிறதா?

மூன்று ஆண் சகோதரர்களுக்குப் பின் மிக நீண்ட இடைவெளியில் பிறந்த அவள், இல்லத்திலே மிகுந்த செல்லப்பிள்ளை. தந்தை, தாய் மூன்று அண்ணன்மார். இவர்களின் சீராட்டிலே வளர்ந்த போது ஒரு நாள்......

**1986 ஆனி 10**

குருநகரில் அன்று வானம் விடிந்தது ஆனால் பலருடைய வாழ்க்கை அஸ்தமித்துப் போயிருந்தது. அலையோடு போராடி, வாழ்க்கைக்கலை வெல்லச் சென்றவர்கள் முப்பத்தி ஒருவர் கடற்படையினால் படுகொலை செய்யப்பட்டனர். விழுது விட்டு தளைத்திருந்த ஒரு குடும்பத் தொகுதியில் மட்டும் பத்தொன்பதுபேர். அத்தனையும் உரமேறிய உழைப்பாளிகள், இறந்து போயிருந்தனர். யார் யாரைத் தேற்றுவது; குருநகரே சோகம் தரித்தது.

அவளும் அழுது கொண்டிருந்தாள். கடலிலே கலந்து விட்ட தந்தையையும், மூன்று தமையன்களையும் நினைத்து அவளால் வேறு என்னதான் செய்யமுடியும்.

கடலலைகள் ஓய்வதில்லை. இந்த மக்களின் துன்பமும்தான்.

**1987 ஐப்பசி 15**

தொடரும் கோட்டை ஷெல் வீச்சுக்குப் பயந்து, அவர்கள் இடம்பெயர்ந்து பூநகரி பகுதியில் அகதிகளாய் இருந்தனர். புதிய சூழல், பலருக்கும் நோய் கண்டிருந்தது. சுகவீனம் உற்றவர்களை ஏற்றிக்கொண்டு சிகிச்சைக்காக யாழ்நகரை நோக்கிப் புறப்பட்டது ஒரு வள்ளம்.

பிறகென்ன வெடிச்சத்தம் எல்லாம் வழமைபோல. பட்டகாலிலே படும் என்பார்கள். மீண்டும் அதே குடும்பத்திலே இடி அந்தக் குடும்பத்தில் 4 பேரும், இன்னும் இரண்டு பேருமாக அறுவர் கடலிலே சங்கமித்தனர்.

இம்முறை பலர் பெண்கள்.

அந்தப்பெண் அப்போது சிறுமி மீண்டும் அழுகிறாள். இம்முறை எஞ்சியிருந்த ஒரே உறவான தனது தாயையும் இழந்து......

**சிறுநண்டு மணல் மீது**
**படமொன்று கீறும்**
**சிலவேளை இதை வந்து**
**கடல் கொண்டு போகும்.**

—மகாகவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பாதர் 24ம் திகதிப் பூசைக்கு நீங்க இங்க நிக்கோணும்" அவசர விடயமாக கொழும்புக்குப் பயண மாக விருந்த பங்குத் தந்தைந்தை யைப் பார்த்துக் கூறுகிறாள் விஜி; அமலவிஜி, அவருக்குப் புரிய வில்லை. ஏன் என்று கேட்பது போல அவருடைய புருவங்கள் வளைகின்றன. "அண்டைக்கு எனக்குப் பிறந்தநாள் பாதர்" என்கிறாள் அவள்.

24ம் திகதியல்ல 22ம் திகதியே திரும்பி விட்டார் பங்குந்தந்தை ஆனால் அவரால் அவளுடைய பிறந்த நாள் திருப்பலியை நிறை வேற்ற முடியவில்லை. ஏனெனில் 23ம் திகதியே அவளுடைய இறுதிச் சடங்குகளை நிறைவேற்ற வேண் டிய நிலையில் அவர் இருந்தார்.

விஜியைப் போன்று கனவுகளை நெஞ்சிலும் கல்விக் குறிப்புக்களை கையிலும் சுமந்தவர்களாக வெள் ளையுடையில் சிட்டென பறந்து திரியும் பள்ளி மாணவர் 21 பேர் 22-09-1595 அன்று நண்பகலில் கொலைவெறி கொண்ட புக்கா ராக் குண்டினால் துவசம் செய்யப் பட்டனர் நூற்றுக்கும் மேற்பட் டோர் படுகாயமடைந்தனர்.

இது நடந்தது நாகர்கோயில் மத் திய மகாவித்தியாலயத்துக்கு அண் மையிலுள்ள இத்தி மரத்தின் கீழ்.

21ம் திகதியிலிருந்தே வடம ராட்சிக் கிராமங்கள்மீது சாவரக் கன் நெற்றிக்கண் திறந்திருந்தான். புக்காரா சுற்றத் தொடங்கியதுமே ஆபத்தை உணர்ந்து கொண்ட அதிபர் மாணவர்களை சிறிதுசிறி தாக கலைய அனுமதித்துக்கொண் டிருந்தார். கலைந்து செல்ல முயன்ற மாணவர்கள்மீது தான் கவிந்தது மரண இருள்.

அந்த இத்தி மரம் வாடி நிற் கிறது. பொசுக்கும் வெய்யிலில் எந்தச் சிறார்களுக்கு வாழ்வளிக் கும் நிழல் தந்ததோ அவர்களுக்கே தான் சாவின் நிழலாய் மாறிப் போனதால் சோகம் தரித்ததோ?

மரணித்த மாணவர்களே இரத் தக்கறை படிந்தது உங்கள் வெள் ளைச் சீருடைகளில் மட்டுமல்ல மானுடத்தின் மனச்சாட்சியின் மீதும்தான். உங்கள் மரணம் இறைச்சித்தம் என்பதை நாங்கள் நிராகரிக்கிறோம். இது எமது சித்தம்; மனிதனின் ஓர்மம்; பழி வாங்கும் உணர்வு; போர்வெறி. போதும் இவை. சிதைந்த உங்கள் உடல்களில் உயிருக்கானதும் அன்புக்கானதுமான ஒரு உறுதி எடுக்கிறோம்.

**"நாட்டில் நெருப்புமழை பெய்யுது பாதர் எங்கட பிள்ளைகளுக்காக மன்றாடுங்கோ..."**

—விஜியின் தாயின் புலம்பல்
ஒரு வேளை இறைவாக்கோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருவறையா? கல்லறையா?

இறைத்திட்டத்திலே உயிர்களைக் கருக்கொள்ளும் இடமாக அமைந்த கருவறைகள் இன்று கல்லறைகளாக மாற்றப்படும் பயங்கரம் உலகெங்கும் பெருகி வருகிறது. இன்று மானிட உயிரின் மாண்புக்கு பேராபத்தாக வந்திருக்கும் இக்கருச்சிதைப்புப் பற்றி யாழ் புனித சவேரியார் குருத்துவக்கல்லூரி அறநெறி இறையியல் விரிவுரையாளர் அருட்திரு. மேரி யோசப் அடிகளாரிடம் சில வினாக்கள் தொடுத்தோம்.

**1. கருச்சிதைப்பு என்பதை வரைவிலக்கணப் படுத்துவீர்களா ?**

இதற்கு பதில் கூறுவதற்கு முன் கருச்சிதைப்பு என்பதற்கும் கருச்சிதைவு என்பதற்கும் இடையேயுள்ள வேற்றுமையை விளக்குவது அவசியம். கருச்சிதைவு (Spontaneous abortion or miscarriage) என்பது கருப்பையில் வளர்ந்து வரும் கரு தானாகவே அழிந்து போவதாகும். சில வேளைகளில் கருவுற்ற பெண்ணின் தவறான நடவடிக்கையால் அவ்வாறு நிகழக்கூடும் அப்படியானால் அப்பெண் அதற்கு ஒரு வகையில் பொறுப்பானவளாகக் கருதப்படலாம். அல்லாவிடில் அவள் அதற்குப் பொறுப்பல்ல அவள் குற்றவாளியுமல்ல. கருச்சிதைப்பு (Induced or procured abortion) என்பது ஒரு பெண் தனது கருப்பையில் வளரும் கருவைத் தனது முயற்சியால் திட்டமிட்டு அழிப்பதாகும். இதற்கு அப்பெண் பொறுப்பாய் இருப்பதால் அவள் குற்றவாளியாகக் கருதப்படுகிறாள். எனவே கருச்சிதைப்பு என்பதை பின்வருமாறு வரைவிலக்கணப்படுத்தலாம். கருப்பைக்கு வெளியே உயிர்வாழ முடியாத (non - viable) கருவை மனித முயற்சியால் கருப்பையிலிருந்து வெளியேற்றி அதை உயிரிழக்கச் செய்வது அல்லது கருப்பையின் உள்ளே அதைக் கொன்றபின் அதை வெளியேற்றுவது கருச்சிதைப்பாகும்.

''கருப்பைக்கு வெளியே உயிர்வாழமுடியாத கரு'' என்று இங்கே குறிப்பிடப்படுவதற்குக் காரணம் என்னவென்றால் ஏழு மாதங்களுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்பட்ட கருவை நவீன மருத்துவ தொழில்நுட்பச் சாதனங்களைப் பயன்படுத்தி கருப்பைக்கு வெளியே உயிர்வாழச் செய்யலாம். எனவே இத்தகைய கருவை அழிப்பது சிசுக்கொலையாகக் (infanticide) கருதப்படலாம்.

2. கருச்சிதைப்புப் பற்றிய திருச்சபையின் ஒழுக்கக் கொள்கை என்ன?

மானிட உயிர் இறைவன் நமக்களித்த உன்னத கொடை அது புனிதமானது. மதிப்புக்குரியது. அன்னையின் வயிற்றில் அது கருவாக உருவாகிய கணத்திலிருந்து பேணிப்பாதுகாக்கப்பட வேண்டியது. எனவே அதை நேரடியாக அழிப்பது ஐந்தாம் கற்பனைக்கு எதிரான கனமான குற்றமாகும். இதுவே தொடக்கத்திலிருந்து இன்றுவரை திருச்சபையின் நிலையான கொள்கையாகும். 2 ஆம் வத்திக்கான் சங்கத்தின் ''இன்றைய உலகில் திருச்சபை'' என்ற கொள்கைத் திரட்டும் (எண் 51) அண்மையில் வெளியிடப்பட்ட கத்தோலிக்க திருச்சபையின் மறைக்கல்வி ஏடும் (எண் 2270 - 2272) திருத்தந்தை 2 ஆம் அருளப்பர் சின்னப்பரின் ''உயிரின் நற்செய்தி'' என்ற சுற்று மடலும் (எண் 58) இதையே வலியுறுத்துகின்றன.

இறையியல் அறிஞர்கள் கருச்சிதைப்பை நேரடியான (direct) கருச்சிதைப்பு மறைமுகமான (indirect) கருச்சிதைப்பு என இரு வகைப்படுத்துகின்றனர். கருவை அழிக்க வேண்டும் என்ற நேர்முக நோக்கத்தோடு ஒருவர் மேற்கொள்ளும் முயற்சியினால் அக்கரு முழுமையாக அழிக்கப்படுவது நேரடியான கருச்சிதைப்பு எனப்படும். மாறாக, கருவை அழிக்க வேண்டும் என்ற நோக்கமின்றி வேறு ஏதாவது நல்ல நோக்கத்திற்காக ஒருவர் மேற்கொள்ளும் முயற்சியின் விளைவாக கரு அழிக்கப்படுவது மறைமுகமான கருச்சிதைப்பு எனப்படும். எடுத்துக்காட்டாக கருப்பை புற்று நோயினால் பாதிக்கப்பட்ட கருவுற்ற ஒரு பெண்ணின் உயிரைக் காப்பாற்றும் பொருட்டு அறுவை மூலம் அவளது கருப்பை அகற்றப்படுவதால் ஏற்படும் கருச்சிதைப்பு மறைமுகமான கருச்சிதைப்பாகும்.

ஒரு கருவுற்ற பெண் இறந்தால் அவளது கருப்பையில் வளரும் கருவும் நிச்சயமாக உயிரிழக்கும் என்பது இங்கு கவனிக்கப்பட வேண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டும். எனவே தான் இரு உயிர்கள் அழிய விடுவதிலும் பார்க்க காப்பாற்றக்கூடிய ஓர் உயிரை யாவது காப்பாற்றுவது மேலானது என்று இறையியலாளர் சுட்டிக்காட்டுகின்றனர்.

எனவே நேரடியான கருச்சிதைப்பு எப்பொழுதும் ஒரு கனமான குற்றம் என்பதே திருச்சபையின் மரபு ரீதியான படிப்பினை யாகும் இக்குற்றத்தைப் புரிபவர்கள் தாமாகவே திருச்சபையிலிருந்து விலக்கப்படுவர் என்று திருச்சபைச் சட்டம் கூறுகின்றது. இவ்வாறு கருச்சிதைப்பு எவ்வளவு பாரதூரமான குற்றம் என்பதைத் திருச்சபை வெளிப்படுத்துகிறது.

3. இதனால் ஏற்படும் தனியனித சமூகப் பாதிப்புகள் எவை?

ஒரு தாய் தனது சேயைப் பேணிப்பாதுகாப்பதிலேயே இயல்பாக நாட்டம் கொண்டிருப்பாள். எனவே அதற்கு மாறாக தனது குழந்தையின் உயிரை அழிப்பது அவள் உள்ளத்தில் நிச்சயமாக பெரும் பாதிப்பை ஏற்படுத்தும். அவள் மனம் குற்ற உணர்வால் அல்லற்படும்

அத்துடன் இதனால் சமூக மட்டத்திலும் பெரும் பாதிப்பு ஏற்படும். ஏனென்றால் கருச்சிதைப்பு குற்றமற்ற ஒருவரின் உயிரைப் பற்றியதாகும். இதனால் சமூகத்தில் மனித உயிரின் மதிப்புக் குறைக்கப்படுகிறது. இதன் விளைவாகத்தான் இன்று உலகெங்கும் அப்பாவி மக்கள் கண்டபடி கொல்லப்படுகிறார்கள்.

## ஒலிக்காத ஓலம்

(தன்னுடைய கருவை சிதைத்துக் கொண்ட ஒரு தாயின் வயிற்றிலே கற்பனையிலே காது வைத்துக் கேட்டபோது...)

**1ம் வாரம்**

அம்மா, எனக்கு உயிர் கொடுத்தாயே, நன்றியம்மா. நான் குடியிருக்கும் கோயிலே உன்னைக் காண நான் எவ்வளவு ஆவலோடு இருக்கிறேன் தெரியுமா?

**2ம் வாரம்**

பாரம்மா எனக்கு கை கால்கள் எல்லாம் வழங்குகின்றன இந்தக் கரங்களாலே எல்போது உன்னைக் கட்டியணைப்பேன் என என் உள்ளம் துடிக்கிறது.

**1ம் மாதம்**

இதோ பார் என் இதயம் துடிக்கிதம்மா சத்தம் உனக்குக் கேட்கிறதா. எனக்காக நீ எவ்வளவு ஆவலோடு காத்திருப்பாய்?

**2ம் மாதம்**

ஐயோ அம்மா! என்னம்மா இது என்னநடக்கிறது எனக்கு ஒன்றுமே புரிய வில்லையே யார் இவர்கள்? ஏன் என்னைக் கொல்ல வருகிறார்கள்? அம்மா உன்னை விட்டால் எனக்கு யாரம்மா பாதுகாப்பு. என்னால் ஓடமுடியவில்லையே... உன் கருவறையையே சிறையறையாக்கி என் கல்லறையாகவும்... ஏனம்மா அனுமதித்தாய்? அம்மா நீயும் கூடவா...? அ...ம்..மா.....

(மௌனம்... எல்லாம் முடிந்தது. சிதைக்கப்பட்ட பிஞ்சு மானுடம் ஒன்று குழி தோண்டிப் புதைக்கப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேள்வி ஒன்று பதில் பத்து

**கேள்வி:** தென்னிலங்கையிலுல் வடஇலங்கையிலும் 'தேசிய பாதுகாப்பு நிதி' சேர்க்கப்படுகிறது இதைப்பற்றி உங்கள் கருத்து என்ன?

**பதில்:**

1. ''ஈழப்போரைப் பொறுத்தமட்டில் பாதுகாப்பு நிது கொடுக்கிறது எதிர்காலத்துக்கு நல்லது. எமதுஇனம் ஒடுக்கப்படும் நிலையில் பலம்பெற இது உதவும். சந்தோஷமாகவே கொடுக்கிறோம்.''

—திரு. ப, பிரேமச்சந்திரன்
அலங்கார் ஆடையகம், 23, நவீன சந்தை, யாழ்.

2. ''பாதுகாப்பு நிதி சேகரிக்கத் தேவையில்லை. என்ன நோக்கத்திற்காக சேகரிக்கினம் என்பது தெரியாது. இது தேவையா என்பது கேள்விக்குறி''

—வண. ஆனந்தராஜா
தென்இந்திய திருச்சபை, யாழ்.

3. ''நாட்டுக்காகத்தானே, கட்டாயம் கொடுக்கவேண்டும்.''

—திருமதி. யோ. புருகலச்சுமி
மயிலிட்டி முகாம், செம்பியன்பற்று வடக்கு.

4. ''(பதில் சொல்லத் தயங்கினார்.)''

—திருமதி மேரி அன்ரனி
செம்பியன்பற்று வடக்கு.

5. ''எமது பகுதியில் நிர்வாக அமைப்பைப் பாராட்டுகிறேன். அதே வேளை இப்பாதுகாப்பு நிதி அடாவடித்தனமாக, ஆயுதபயங் காட்டி மக்களிடம் இருந்து புழியப்படுகிறபோது, இந்நிர்வாகம் அடக்குமுறை அமைப்பாக மாறுகிறது. தென்னிலங்கையில் இப்படியாகப் பொதுமக்களிடமிருந்து பெறப்படுவது பற்றி எனக்குத் தெரியாது.

— வண. சோமாஸ்கந்த சர்மா
இலந்தைக்குளம் பிள்ளையார் கோயில் கொழும்புத்துறை மேற்கு.

6. ''நமது நாட்டை மீட்பதற்கு ஒருசிறிய உதவியாயினும், அதைக் கட்டாயப்படுத்திப் பெற்றுக் கொள்வதாயின் அது ஒரு இரக்கமற்ற செயலாகும்.''

—ஒரு கடற்றொழிலாளி
இளாலி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. ''நிதி சேகரிக்கிறதால சமாதானம் வராது. அந்த நிதியை மக்களுடைய நன்மைக்காகப் பாவிப்பது நல்லது. அந்த நிதியைக் கட்டாயப்படுத்தி எடுக்காமல் இருப்பது மிக நல்லது.''

—வண. சகோதரி மாரி லூயிஸ்
கார்மேல் மடம், தாழையடி.

8. ''இரண்டுமே அழிவிற்கும் ஆயுதத்திற்கும் பயன்படப் போகின்றன. விரும்பி வழங்கப்படுவதாக அன்றி வற்புறுத்தி வாங்கப்படுவதாக உள்ளது. இதில் எங்களின்நிலை மத்தளத்திற்கு இரண்டுபக்கமும் இடி.''

—ஆசிரியை
கன்னியர் மடம் மகாவித்தியாலம் யாழ்ப்பாணம்

9. ''பெரிய முதலாளிமார் குடுக்கத்தான் வேணும். அவர்கள் எம்மிடம் சுரண்டிக் கொள்வர். பிச்சை எடுப்போர்க்கு எதிர்காலம், குடும்பம் எனும் பிரச்சனை இல்லை. நடுவில் இருக்கும் நாம் என்ன செய்வது? எடுப்பதைத்தானும் கொஞ்சமாக எடுத்தாலாவது நாமும் வாழ்க்கையை ஓட்டலாம்.''

—ஒரு தொழிலாளி, திருநகர்.

10. ''தென்னிலங்கையில் பெறப்படுவது மக்கள் கொலைக்கு, வடஇலங்கையில் பெறப்படுவது சுரண்டல். இதுவும் கொல்லவும், இரத்தம் சிந்தவுமே பயன்படுகிறது.''

—ஒரு ஆசிரியை
புனித பத்திரிசியார் கல்லூரி, யாழ்ப்பாணம்

## ஆசிரியர் குறிப்பு

*சமூக விஞ்ஞானம் பற்றி ஒரு சில வார்த்தைகள். சமூக விஞ்ஞானத்தில் மேற்கொள்ளப்படும் ஆய்வுகள் விஞ்ஞான ஆய்வு கூடங்களில் மேற்கொள்ளப்படுபவை போன்றவையல்ல. இவற்றிலிருந்து நிரந்தரமானதும் உறுதியானதுமான முடிவுகளுக்கு நாம் வரமுடியாது. மனிதன் ஒரு மாறிலியல்ல சந்தர்ப்பத்திற்கும் சூழ்நிலைக்குமேற்ப அவன் மாறக் கூடியவன். தனது விருப்பப்படி தரவுகளை மாற்றவல்ல பகுத்தறிவை உடையவன், ஆகவே தரிசன பூமியின் மக்கள் கருத்தை வெளிப்படுத்த முயலும் ஒரு கேள்வி பத்துப் பதில்கள் கேட்டோம் கேட்டார்கள் போன்ற பகுதிகளின் மட்டுப்படுத்தப்பட்ட தன்மையை புரிந்து கொள்ளுமாறு வாசகர்களைக் கேட்டுக் கொள்கிறோம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்திரம் பேசுதடி



சித்திரங்கள் பேசுவது விசித்திரம் தான்!
ஆனால் அதுதான் உண்மை.
உயர் பிறப்பாம் மானிடத்தின் ஏக்கம்,
அதன் முகமதிலே தணியவில்லை அதன் தாக்கம்!
''அகதி'' வாழ்க்கையின் அவலம் - அதை
அவரவர் அனுபவித்தால் தான் புரியும்!
கண் இருந்தும் குருடர்களாய்,
காதிருந்தும் செவிடர்களான - எமக்கு
இவர்கள் கூக்குரல் கேட்குமா? - எம்காதில்

—அருள்—

அழுங்கள்
காதுகள் விடைக்க கண்கள் சுருங்க
வாயை விரித்து கண்களை இறுக்கி
நன்றாக அழுங்கள்
சின்னவர்களே! உண்மை குழிகளில் உறங்கும் இவ்வேளை
நீங்களாவது உண்மையாக அழுங்கள்
எனெனில் நாங்கள் உண்மையை ஒருக்காலும் காணவில்லை

—அரவிந்—



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயின் அணைப்பைத் தஞ்சமாய் கொண்டவர்
இடர்கள் எதுவும் எமக்கு வருமோ எனக் கனவு கண்டவர்
பெற்றதாயின் உதிரத்தைப் பற்றிப் பிடித்தவர்
பிறப்பின் பொழுதே அன்பைச் சுவைத்தவர்
யுத்த ஆறுவேகமாய் பாயவே இவர்கள் நீங்காதுயரினை
அடையநேர்ந்தது
பாசக் கயிறு வேசம் போட்டது பச்சைப் பாலகர் பாலுக்காய் துடிக்க
பத்து மாதம் சுமந்து பெற்றவளை புக்காராக் குண்டு புதைந்துவிட்டது
அம்மா! அம்மா! என அலறிய பிஞ்சுகள்
ஆதரவற்று அலறும் நிலை இங்கு.

—கிறேஸ்—

உளமதின் உணர்வலைகள் முகமதில் கோலமிட
அகமதில் வேதனைகள் அலைமோதி வெளியிட
ஆண்டவரே உனை நினைத்து அடிமனம் ஓலமிட
ஆழ்பவனின் அசுரத்தனம் ஆலவட்டம் போடுதிங்கே
ஆண்டவரே நாம் வாழ்வோமா? வீழ்வோமா?
வேண்டுமோ எமக்கிந்த அடிமை வாழ்வு?
நாயகனே நாம் அறிந்தோ பிறந்தோம் இவ்வாழ்வுக்காக?
நன்மையின் நாயகனே நீர் நயந்தருள் புரியாவிடில்
பயந்து நாமும் பங்கருக்குள் புகுந்தாலும்
ஷெல்லும் குண்டும் எம்மை சிதறடித்துக் கொல்லுமே!

—இரா. அன்ரன் றெக்ஸ்—

கவலையும் கண்ணீரும் கல்லறையில் கண்டாயோ?
தரிசனத்தில் நீ காண்பதைக் கவி பாடித் தீராயோ?
நுகரும் மூக்கு கண்ணாகிய காட்சியிது;
பகரும் நாக்கு கூறிடும் மனச்சாட்சி எது?
காளை உன் கண்ணீர் குறையாதோ? கவலை நீங்காதோ?
நாளை நான் காணும் ''தரிசன பூமி'' அது தானோ?
சித்திரம் பேசியதடி; - சிந்திக்க வைக்குதடி;
பத்திரம் இச்சஞ்சிகை - பகைவர் சிதைத்திடுவார்.

—ஆனந்தராசா—

*இது போட்டிக்குள் ஒரு போட்டி. ஐந்து ஆக்கங்களையும் தரப்படி ஒழுங்குபடுத்தி எழுதுங்கள். சரியான தெரிவிற்கு பரிசுண்டு. ஒழுங்கு படுத்தும்போது ஆக்கியோரின் பெயரை மட்டும் எழுதினால்போதும். சிறந்த கவிதையை அடுத்த இதழில் அறிவிப்போம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேட்டோம் கேட்டார்கள்

கேட்பவர்:
திரு. A.S. அகஸ்ரின்
ஆசிரியர்

பதில் தருபவர்
திரு. M. பாக்கியநாதன்
ஆசிரியர், புனித பத்திரிசியார் கல்லூரி

1. *ஆளப்படுவோர் அநியாயம் அடக்கு முறை என ஓலமிடுகின்றனர். ஆனால் ஆள்வோர் புரட்சி, சதி என்கின்றனர். இந்நிலைக்கும் காரணம் என்ன?*

● ஆளப்படுவோர் தமது உரிமைகளையும் நீதியையும் கோரி நிற்கின்றனர். ஆனால் ஆளுவோர் அவற்றை மறுக்கின்றனர் அல்லது அலட்சியம் செய்கின்றனர். இதனால் ஆளப்படுவோர் தமது உரிமைக்காகவும் நீதிக்காகவும் சில வழிமுறைகளைக் கையாளும்போது குறிப்பிடப்பட்டநிலை உருவாகிறது. ஆளப்படுவோரின் கோரிக்கை நியாயமாக அணுகப்பட்டால் ஒரு சாராரை மற்றவர் சந்தேகிக்க இடம் இராது.

2. *ஆள்வோர் ஆளப்படுவோருக்கிடையில் சுமுக நிலை அமைய நீர் கூறும் வழிவகைகள் எவை?*

i. இரு சாராருக்குமிடையில் புரிந்துணர்வு விருத்தி செய்யப்படல் வேண்டும்.

ii. விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையுடன் பரஸ்பர நம்பிக்கையுடனான உறவுக்கு வழி சமைத்தல்

iii. நியாயம் இது எனப்புரிந்து கொண்டவர்களால் எடுத்துக் கூறப்படும் போதாவது ஏற்றுக்கொள்ளும் மனப்பாங்கு வேண்டும்.

iv. நீதி, சமாதானத்தின் பெயரால் தனித்தோ, கூட்டாகவோ தன்னிச்சையாக தீர்மானம் எடுக்கும் துணிவு வேண்டும்.

3. *நீதி சமாதானம் என்று இணைத்துத்தான் பேசப்படுகிறது. ஆனால் நீதியை நிலைநாட்ட வேண்டுமாயின் அமைதிக்குப் பங்கம் ஏற்படுதலும், சமாதானத்தைப் பேணுவதற்காக இதுதான் நீதி நியாயம் என்று பாராது விட்டுக் கொடுத்து வாழ்தலும் அவசியமாகிறதே. உமது கருத்து என்ன?*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- நியாயம் நீதியை விட்டுக்கொடுத்துப் பேணப்படும் சமாதானம் நிரந்தர சமாதானமாக அமையமாட்டாது. அப்படியான சமாதானம் ஏதோ ஒரு வகையில் சுய நலத்தை மையமாகக் கொண்டதாகும். நீதியும் சமாதானமும் தற்காலிகமானதல்ல, தூர நோக்குடன் மேற் கொள்ளப்படவேண்டியது.

4. *நீதி சமாதானத்தின் காப்பாளர்கள் எனப்படுவோர் அதற்கு முரணாக நடக்கும் சந்தர்ப்பங்கள் பல. இவற்றை எங்ஙனம் சீர் செய்யலாம்?*

- நீதி சமாதானத்தின் காப்பாளர்கள் என்று கருதப்படுவோர் மாறாக நடக்கும் போது அவ்வாறான நிகழ்வுகளை சுட்டிக்காட்டி துணிவுடன் செயற்பட தகுந்த அமைப்புகள் உருவாக்கப்படவேண்டும் அவர்களின் போலி வேடங்கள் களையப்பட வேண்டும்.

| கேட்பவர் | பதில் தருபவர் |
|---|---|
| திரு. M. பாக்கியநாதன் | ? |

இப்பகுதி சங்கிலித் தொடர் போன்ற கேள்வி பதில் பகுதியாகும் முதல் இதழின் கேள்வி கேட்பவரை மட்டுமே நாம் தெரிந்தெடுத்தோம் பதில் தருபவரை அவரே தேர்ந்தெடுத்தார். சென்ற முறை விடை தந்தவர் இம்முறை வினாத்தொகுப்பவர் ஆகிறார். இம்முறை விடையளிப்பவர் அடுத்த முறைக்கு வினாத்தொடுப்பார். அவர் விடையளிக்கத் தெரிந்தெடுப்பவர் நீங்களாகவும் இருக்கலாம். தயாராக இருங்கள்.

இவ்வினாத் தொடரில் இணைய சந்தர்ப்பம் கிடைப்பவர்களுக்கு ஒரு வேண்டுகோள், உங்கள் விடயங்களையும் நீங்கள் தெரிந்தெடுக்கும் ஆட்களையும் பல தரப்புக்களிலிருந்தும் தெரிவு செய்யுங்கள், நன்றி.

ஆசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2000ம் ஆண்டுகளை நோக்கி மானுடம்

அறவழிவெறும் அரசியல் கருவியல்ல, சத்தியத்தை தேடுதலுடன் அன்பில், காருண்யத்தில் தழைத்து எழும்புவது. காந்தி அதை அரசியல் கருவியாக பாவித்து ஓர் வரையறுக்கப்பட்ட இந்திய விடுதலையைப் பெற்றார். அது அவருடனேயே மடிந்தது போன்று, நம் மண்ணின் விடுதலைக்கும் நம் முன்னைய தமிழ் தலைவர்கள் 1968ம் ஆண்டு சத்தியாகிரகம் என்ற தலைப்பில் அகிம்சை வழியை பாவித்தனர். சத்தியம் செய்யப்படவேண்டிய சிந்தனை, சாதனை, வாழ்க்கைநிலை என காந்தி செய்ததை மறந்த இந்திய வல்லரசுக்கு இதை தீலிபன் எட்டு ஆண்டுகட்கு முன் நினைவூட்டி உண்ணாவிரதமிருந்தார்.

போர்கள் மானிட வரலாற்றின் தவிர்க்கமுடியாத அம்சமாகவே பெரும்பாலும் தோன்றுகிறது. ஆனால் 1ம் உலக யுத்தத்தின் பின் ஆடப்பட்ட போர்களில் அதிக இழப்பு ஆயுதம் தாங்கா பொது மக்களிடையே ஏற்படுகிறது. இதன் நிமித்தமும் போரின் வேறு அமுக்கங்கள் மத்தியிலும் ''இன்று நாங்கள் பயத்தால் ஆளப்படும் ஒரு சமூகமாக மாறிவிட்டோம். ஆத்மீக பலத்தை இழந்து விட்டோம்'' என்கிறார் டாக்டர் தயா சோமசுந்தரம். இன்று இதனால் சத்தியம் இருட்டடிக்கப்பட்டு அன்பு மாற்றி அமைக்கப்பட்டு பாசாங்கு, பகைமை பழிவாங்கல் முதலியவை தலைதூக்கி தாண்டவமாடுகின்றன. குடும்பங்களிலும் சமூகத்திலும் இதற்கு மாற்று மருந்து அன்பு வழியே. சத்திய தர்மவழி அன்பு வழிக்கு இட்டுச் செல்கிறது.

இதன் நிமித்தமே அறவழி அன்புவழி காட்டும் காருண்யம், மனித மாண்பென பேணப்படல் வேண்டும் என்று உணர்ந்த உலகத் தலைவர்கள் 2ம் உலக மகாயுத்தத்தின் அழிவுகளின் பின்னணியில் ஐக்கிய நாடுகள் சபையினை அமைத்து மனித உரிமைகளை பிரகடனம் பண்ணினர். அதில்

எண் 5: எவரும் சித்திரவதைக்கோ அல்லது கொடுமையான மனித தன்மையற்ற அல்லது இழிவான நடைமுறைக்கோ தண்டனைக்கோ உட்படுத்தப்படலாகாது.

எண் 9 ஒரு தலைப்பட்ட மனப்போக்கான வகையில் கைது செய்யப்படுதல், தடுத்து வைக்கப்படுதல், நாடு கடத்தல் ஆகியவற்றுக்கு எவரும் ஆட்படுத்தப்படலாகாது, போன்ற சரத்துக்கள் காணப்படுகின்றன.

2000 ஆண்டுக்குள் நுழையும் மானிடர் பயங்கர பலாத்காரம் நிறைந்த சகாப்தத்தினுள்ளேயே நுழைகிறது. அதன்முன் நிற்கும் கேள்வி சாத்வீகமா? பலாத்காரமா என்பதல்ல மனித குலம் தன்னை சீரழித்து நிர்மூலமாக்குமா அல்லது காத்துக்கொள்ளுமா என்பதாகும். பின்னையது அன்பு அறவழியில்தான் இறுதியில் தங்கி நிற்கும். —V. ஆச்சிரமம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடிதங்களிலிருந்து...

★ 'தரிசன பூமி' முதலாவது இதழ் சுகப்பிரசவமானது குறித்து மிக்க மகிழ்ச்சி குழந்தை ஊட்டமுடன் வளர நிறைய உண்மை உணர்வுகளை ஊட்டுங்கள். கேள்வி ஒன்று பதில் பத்து, ஆராய்ச்சி மணி கவசகுண்டலங்கள் போல குழந்தையுடன் பிறந்தவை. தயவு செய்து தானம் செய்து விடாதீர்கள். கேள்வி ஒன்று பதில் பத்திலிருந்து மதத்தலைவர்களே சமாதானப் புறா பறப்பதை விரும்பாத ம(மா)க்கள் குழு என்பதை அறிந்து கொண்டேன். ஆராய்ச்சிமணி பற்றி விரிவாகக் கூறுவீர்களா? எங்கே குழந்தையின் பிறந்த திகதியை அட்டையில் போட மறந்து விட்டீர்களா? கவிதைப் போட்டியின் முடிவுத் திகதியையும் காணவில்லையே? அடுத்த இதழை ஆவலுடன் எதிர்பார்க்கும். அரவிந், நவாலி

★ ...தரிசன பூமி சஞ்சிகையில் ஆராய்சிமணி என்றொரு சொல்லைக் கண்டேன் அது ஆராய்ச்சி மணி என்று இருக்க வேண்டும். ஆங்கிலத்தில் நீதியின் மணி என பொருள் கொள்ளப்படுகிறது... கடவுள் உங்கள் பணியை ஆசீர்வதிப்பாராக. அருட்திரு. அதிரியான் யோசப் அ.ம.தி.

நன்றி. திருத்திக்கொண்டோம் — ஆசிரியர்

★ ......ஒவ்வொரு தனிமனிதனும் எமது பிரதேசமும் உண்மையின் பாதையில் வழிநடக்க வழிசமைக்கும் இவ்விதழ் இன்னும் பல அம்சங்களை இணைத்து புதுப்பொலிவுடன் திகழ வாழ்த்துகிறேன்.

மரிஸ்ரெல்லா, குருநகர்.

★ நீதியின்றி, சமாதானமின்றி புறத்தேயிருந்தும் அகத்தேயிருந்தும் நசுக்கப்படும் ஈழமண்ணில் இவற்றைப் பற்றிச் சிந்திக்கவே தயங்கி, உண்மையைத் தேடியும் காணமுடியாத நிலையில் வாழும் எம்மத்தியில் விழிப்புணர்வைக் கொணரும் ஒரு கீற்றாக 'தரிசன பூமி' இருக்கும் என்று எனக்கு நம்பிக்கையுண்டு. இது எப்போதும் பக்கச் சார்பற்று இருக்க பிரார்த்திக்கிறேன்..... செ. எயின்சிலி, உயரப்புலம்

★ ......... இளந்தலைமுறைகள் மத்தியிலும் கிறிஸ்தவ நற்பண்புகளை நிலைநிறுத்தி ஆயுதப்போரினாலன்றி அகிம்சை வழி செல்வதே உத்தம வழியென உணர்ந்து அவ்வாறான ஆக்கங்களை உருவாக்கி தரிசன பூமியின் தாயகத்தைப் பெற்று மகிழ வேண்டி விடை பெறுகிறேன்.

— அருட்சகோ. மாறிலூயிஸ் அ. க. தாளையடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இது நீங்கள் அவசியம் படிக்க வேண்டியது

சென்ற பாதுகாவலன் இதழுடன் முதலாவது தரிசன பூமியைத் தரிசனம் கொண்டிருப்பீர்கள். பலர் பாராட்டுத் தெரிவித்தனர். நேரடியாக இன்னும் சிலர் ஆரோக்கியமான கருத்துக்களும் திருத்தங்களும் முன்வைத்திருந் தனர். அதுவும் நேரடியாகவே அவர்களுக்கு எமது நன்றிகள்.

மிக மிகச் சிலரே தமது கருத்துக்களுக்கு எழுத்து வடிவம் கொடுத் திருந்தனர். உங்கள் கருத்துக்கள் காற்றிலே கலந்து விடாமல் நிலைத்து இருக்க அவற்றை எழுத்திலே போடும் மகத்தான செயலை செய்யுங்களேன்.

''தரிசன பூமி'' சிறிய இதழ் சுருக்கமாக எழுதுங்கள்
பிரசுரிப்போம்.
காத்திருக்கிறோம்.

கேள்வி - பதில் பகுதி ஒன்றையும் ஆரம்பிக்க எண்ணுகிறோம் நீதி சமாதானம் தொடர்பான வினாக்களை எழுதுங்கள் தகுந்தவர் களிடம் விடைகேட்டுப் பிரசுரிப்போம். அல்லது ஒன்று செய்யுங்கள்; யாரிடம் விடை எதிர்பார்க்கிறீர்கள் என்பதையும் குறித்தனுப்புங் களேன் அவர்களிடமே கேட்டுப் பிரசுரித்து விடுகிறோம்.

இன்னுமொன்று...
ஆராய்ச்சி மணி இன்னும் மௌனமாக இருக்கிறது. அதன் மௌனம் சமூக நிலையைக் குறிக்கும் என்பார்கள். அதுவரையில் மகிழ்ச்சிதான் அல்லது பூனைக்கு யார் மணிகட்டுவது என்ற பிரச்சனையோ...?
விளக்கம் கேட்டிருந்தீர்கள்...
திருச்சபைக்கு உள்ளேயோ, புறம்பேயோ நீங்கள் காணும் ஏதேனும் அநீதியைக் குறிப்பிட்டு, நீதிகேட்டு எழுதுங்கள். உரிய இடத்தில் விசாரித்துக் கிடைக்கும் விளக்கத்தையும் பிரசுரிப்போம்.

இறுதியாக, ஆனால் முக்கியமான விடயம்;
நான்கு 'தரிசன பூமி'' இதழ்கள் மாத்திரமே, அறிமுகப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு, பாதுகாவலனுடன் இலவச இணைப்பாக வெளிவரும்.

(இது இரண்டாவது இதழ்) அதன்பின்பு பிரதி 5/-வென விற்பனை செய்ய எண்ணியுள்ளோம். அதற்கு உங்கள் ஆதரவு முக்கியமானது. முகவர்களாக செயற்பட விரும்புபவர்கள் தொடர்பு கொள்ளுங்கள்.
மிகமுக்கியம், உங்களை சந்தாதாரராக இணைத்துக் கொள்ளுங்கள்.

வருட சந்தா 60/-
சகல தொடர்புகளுக்கும்;
'தரிசன பூமி' த. பெ. எண் 2
ஆயர் இல்லம், யாழ்ப்பாணம்.

—ஆசிரியர் குழு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org